**Kalanjiyam International Journal of Tamil Studies**
**களஞ்சியம் - சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்**
Peer-Reviewed | Open Access | Crossref DOI &
Global Indexing | Google Scholar Impact Factor
DOI: https://doi.org/10.63300/kijts15sp012026.58
https://ngmtamil.in/

# பண்டைத் தமிழரின் வாழ்வியல் நெறிகள்

**ஹ. கணேஷ் பிரசாத்,**
முனைவர் பட்ட ஆய்வாளர், , ஆசிரியர் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி,
எஸ்.ஆர்.எம் பல்கலைக்கழகம், காட்டாங்கொளத்தூர், செல்கல்பட்டு மாவட்டம்.
ganeshprasad1982@gmail.com

**முனைவர்.N.பிரேமா,**
நெறியாளர், ஆசிரியர் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி,
எஸ்.ஆர்.எம் பல்கலைக்கழகம், காட்டாங்கொளத்தூர், செல்கல்பட்டு மாவட்டம்.

**"யாதும் ஊரே யாவரும் கேளிர்"**1 என்கிறது புறநானூறு இந்த வரிகளை நாம் சதாரண வரிகளாக எடுத்துக்கொள்ள முடியாது ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே கணியன் பூங்குன்றனார் எல்லா ஊரும் என்னுடைய ஊராகும் உலகின் எல்லாப் பகுதியல் வாழும் மக்களும் என்னுடைய உறவினர்கள் என்ற ஆழமான கருத்தை அழுத்தம் திருத்தமாகவும் ஆணித்தரமாகவும் சொன்ன கூற்று இங்கு ஒப்பு நோக்கத்தக்கது.

பண்டைத் தமிழர்கள் வாழ்க்கையையும் வாழ்வியலையும் இரு கண்களாகப் பாவித்து தங்களுடைய வாழ்க்கையை மேற்கொண்டனர். இவ்வாறாக அவர்கள் கடைப்பிடித்தவற்றில் சில முக்கியமானவை:

1. உணவு முறைகள் 2. பழக்க வழக்கங்கள்3. நம்பிக்கைகள்4. உடைகள்

5. கட்டிடக்கலைகள் 6. பண்பாடுகள்7. பொய்க்கூறாமை8. மது குடிக்காமை

9. புறங்கூறாமை10.இன்னாசெய்யாமை 11. ஊன் உண்ணாமை 12.பெரியோரை மதித்தல்

இன்னும் பல...

**பழக்கவழக்கங்கள்**

**"வைககறைத் துயில் எழு"2 (ஆத்திசூடி-106)**

பண்டைத் தமிழர்கள் அதிகாலையில் எழுந்திருக்கும் பழக்கத்தை பின்பற்றி ஒழுகினர் என்பதை நாம் ஆத்திசூடியின் வாயிலாக அறியமுடிகிறது.

மாதா, பிதா, குரு, தெய்வம் என்பற்கு ஏற்ப அன்னையையும் தந்தையையும் போற்றி முழு முதற்கடவுளாகப் போற்றி வணங்கினர் தமிழர்கள் என்பதனை திருக்குறள் , ஆத்திசூடி மற்றும் கொன்றை வேந்தன் வாயிலாக அறிந்துகொள்ள முடிகிறது. மேலும், இளம் வயதில் நம்மை சீராட்டி பாலூட்டி வளர்த்த அன்னை தந்தையைப் பேணிக்காப்பது நம் தலையாய கடமை என்பதை

**"தந்தை தாய்ப்பேண்"3 (ஆத்திசூடி- 20)**

இதனையே

கொன்றை வேந்தனில் ஔவையாரும்

**"அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்"4 (கொன்றை வேந்தன்-1)**

காலையில் எழுகடவுளை வணங்குஎன்ற ஆன்றோர் வாக்கிற்கு இனங்க அதிகாலையில் எழுவதோடு நில்லாமல் கடவுளை வணங்கும் பழக்கத்தையும் கொண்டிருந்தனர். அக்கடவுள் உருவ வழிபாடாக இருக்கலாம் (அ) இயற்கையை வணங்குவதாகவும் இருக்கலாம் என்பதற்கு பண்டைய இலக்கியத்தில் சான்றுகள் உள்ளன.

இதறகு

**"திங்களைப் போற்றுதும் திங்களைப் போற்றுதும்**
**ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும்**
**மாமழை போற்றுதும் மாமழை போற்றுதும்"5**

**(சிலப்பதிகாரம், மங்கல வாழ்த்துப் பாடல்)**

என்ற பாடல் வரிகளைச் சான்றாகக் கூறலாம்.

இஃது பண்டைய காலந்தொட்டு பாரதிகாலம் வரை தொடர்வதையும் தமிழ் கூறும் ஆய்வுலகம் மெய்ப்பித்தும் வருகிறது.

இதனைப் பாரதி தன்னுடைய பாப்பா பாட்டில் அதிகாலையில் எழுந்து படிக்க வேண்டும் என்று கூறுகிறார்

**"காலை எழுந்தவுடன் படிப்புபின்பு**
**கனிவு கொடுக்கும் நல்ல பாட்டு**
**மாலை முழுதும் விளையாட்டுஎன்று**
**வழக்கப் படுத்திக்கொள்ளு பாப்பா."6**

இதனை இன்றைய அறவியல் கண்டுபிடிப்புகளும் ஆய்வுகளும் மெய்ப்பித்துவருகின்றன.

**பண்டைத் தமிழர்களின் வாழ்வியல் நம்பிக்கைகள்:**

சங்க்காலம் தொட்டு தற்கால இலக்கியங்கள் வரை தம்முடைய அன்றாட வாழ்க்கையில் பல்வேறு வகையான நம்பிக்கைகளை கொண்டிருந்தனர் என்பதை பண்டைக்கால இலக்கியங்கள் நமக்குப் பறைசாற்றுகின்றன.

**சான்றாக**

1.காகம் கரைந்தால் உறவினர் வருவார்கள் என்ற நம்பிக்கையும்.

2.முதுபெண்டிர் விரிச்சி கேட்டு நிற்பதை முல்லைப்பாட்டில் இருந்தும்.

3."காகம் இடமிருந்து வலமாகப் பறந்து செல்வது நன்னிமித்தாமாகச் சிந்தாமணியில் இடம் பெறுகிறது.காக்கையின் செலவு நன்னிமித்தமாகச் சங்க இலக்கியங்களில் சுட்டப்படவில்லை.

சிந்தாமணியில் சீவகன் நகரில் நுழையும்போது இடமிருந்து வலமாகக் காக்கைப் பறந்து சென்றது.இந்நிமித்தக்காரணிகள் மூலம் சீவகனுக்கும் அவனுடைய நாட்டிற்கும் நன்னிமித்தம் உணர்த்தியதாகச் சுட்டுவார் தேவர்.

இதனை,

**மலரணி மணிக்குட மண்ணு நீரோடு**
**பலர்நலம் பழிச்சுபு பரவ வேகினான்**

**அலர்கதிர் கரும்பிள்ளை மருப்ப வாய்நகர்**
**உலகளந் தரனெனவுள் புக்கானரோ"7**

**( சீவக.1251)**

ஒரு வேலையின் பொருட்டு வெளியே செல்லும் போது நாள், நட்சத்திரம், திதி போன்றவையைப பார்த்து செல்வதும் செய்யத் துவங்குவதும் இன்றளவும் பெரும்பான்மையான மனிதர்களிடையே திகழ்ந்து வரும் நம்பிக்கையாகும்.

**பண்டைத் தமிழர்களின் வாழ்வியலில் உடைகள்**

பண்டைத் தமிழ்ர்கள் வாழ்வியல் சிந்தனைகளில் உடைகள் ஒரு பெரும்பங்கை வகிக்கிறது. பண்டையக்காலந்தொட்டு இக்காலம் வரை ஆண்கள் என்றால் வேட்டி சட்டையும் பெண்கள் என்றால் சீலையும் உடையாக பெரும்பாலும் அணிந்து வந்தனர். வீட்டில் நடக்கும் நல்ல நிகழ்சிகளுக்குப் பட்டுவேட்டி சட்டையும் பட்டுச்சீலையையும் அணிந்து இன்றளவும் சென்று வருகின்றனர் என்பது ஆய்வாளர் கருத்தாகும்.

ஆள்பாதி ஆடைபாதி என்ற பழமொழிக்குகேற்ப பண்டைத் தமிழர்கள் தங்களுடைய நெறிகளையும் வாழ்க்கை முறைகளையும் ஆடையின் வழியாகப் பறைசாற்றி வருகின்றனர் என்பது இங்கு ஒப்பு நோக்கத் தக்கது.

ஆடை இல்லா மனிதன் அரை மனிதன் என்ற பழமொழிக்குகேற்ப ஆதிகால மனிதன் எப்படி காட்டில் வாழ்ந்து வந்து மரத்தின் இலைகளையும் தழைகளையும் ஆடையாக அணிந்தானோ அதுபோல நாகரிகத்தின் படிப்படியான வளர்ச்சியால் பண்டைத் தமிழன் உடையில் பெருத்த மாற்றத்தையும் அதன் வாயிலாக தம்முடைய வாழ்வியலை வாழ்க்கைமுறையின் மூலமாகத் தானும் கற்றுக்கொண்டனர் மற்றவர்களுக்கும் கற்றுக்கொடுத்தனர்.

இதன் வளர்ச்சியால் இன்று சீலை வேட்டி என்பது அயல்நாட்டினர் கூட நம்முடைய நிகழ்ச்சிகளில் பங்கு பெறும்போது அவற்றை அணிந்து நம்முடைய பண்பாட்டிற்கும் பாரம்பரியத்திற்கும் துணைபுரிந்து வருகின்றனர் என்பது அண்மைய ஆய்வாளர் கருத்தாகும்.

**சான்றாக**

ஜப்பானியர்கள்,சீனர்கள், ஐரோப்பியர்கள் போன்றோர் தமிழரின் பாரம்பரிய உடைகளை அணிந்து நம்முடைய இல்லத்தில் நடைபெறும் சுப நிகழ்ச்சிகளில் பங்கு பெறுகின்றனர்.

**கட்டக்கலைகள்**

பண்டைத் காலந்தொட்டு தமிழ்ர்கள் கட்டக்கலையில் சிறந்து விளங்கி வருகின்றனர் என்பதற்கு சேரர் ,சோழர்,பாண்டியர்,பல்லவர்கள் தமிழகத்தை ஆண்ட பல பேரரசுகள் மற்றும் சில குறுநிலமன்னர்கள் தங்களுடைய கட்டக்கலைக்குச் சான்று பகர்கின்றன.

**சான்றாக**

இராஜ இராஜ சோழன் கட்டிய தஞ்சை பெருவுடையார் கோவில் கோபுரத்தின் நிழல் கீழே விழாமல் கட்டப்பட்டதும் அவர் கட்டிய கோவில் கோபுரத்தில் ஓர் இடத்தில் கூட அவருடைய பெயரோ அல்லது புகைப்படமோ செதுக்கப்படவில்லை என்பதை நாம் வரலாற்றின் வாயிலாக அறிந்துகொள்கிறோம்.இராஜேந்திர சோழன் கட்டிய கங்கைகொண்டசோழபுரம் சோழர்களின் கட்டடக்கலைக்கு சான்று பகர்கிறது. சேர மன்னன் செங்குட்டுவன் கண்ணகிக்குக் கோவில் கட்டியதை நாம் சிலம்பு வாயிலாக அறியமுடிகிறது.பாண்டியர்கள் கட்டிய மதுரை மீனாட்சி அம்மன் கோவில்.பல்லவர்கள் கட்டிய மாமல்லபுரத்துக் குடவரைக் கோவில்கள் காஞ்சி நகரில் வரதராஜர் கோவில் மற்றும் காஞ்சி ஏகம்பரேஸ்வரர் கோவில் போன்றவை இன்றளவும் தமிழர்களின்

*தமிழ்த்துறை - சங்கரா அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரி (தன்னாட்சி)

பாரம்பரிய கட்டட முறைகளையும் பண்டைய மன்னர்கள் கடவுளையும் வாழ்வியலோடு சேர்த்து கடைபிடித்தனர் என்பதை நம்மால் தமிழ் பக்தி இலக்கியத்தின் வாயிலாகவும் தமிழக வரலாறும் பண்பாடு வாயிலாகவும் அறிய முடிகிறது.

**பண்டைய மக்களின் பண்பாட்டில் வாழ்வியல்**

பண்பாடும் மக்களின் வாழ்க்கை முறையும் ஒரு நாணயத்தின் இரண்டு பக்கங்கள் போல இரன்றக் கலந்து இரண்டையும் பிரிவு முடியாத நிலையை எட்டியுள்ளதை நம்மால் கண்கூடாகக் காண முடிகிறது. பண்பாடு என்ற சொல்லுக்கு இணையம் தரும் பொருள் "ஒரு குறிப்பிட்ட சமுகத்தின் வாழ்கைமுறை, பழக்கவழக்கம்,நம்பிக்கைகள் மற்றும் கலை ஆகியவற்றின் ஒட்டுமொத்த தொகுப்பு என்பது ஆய்வாளர் கருத்தாகும்". எப்படி மேடு பள்ளமாக உள்ள நிலத்தை ஒரு விவசாயி எருதுகளையும் கலப்பையும் கொண்டு உழுது சீர்படுத்துகிறாரோ அதுபோல மனிதர்கள் தங்களுடைய வாழ்க்கை பண்படுபடுவதற்குச் சில நடைமுறைகளை தம்முடைய வாழ்க்கையில் கடைபிடித்தனர்

**சான்றாக**

1. வாழ்க்கையில் எப்போதும் உண்மை பேசுதல்.

2. வாழ்வில் எப்போதும் நேர்மறை சிந்தைனைகளை வளர்த்தல்.

3. வாழ்க்கையில் எப்போதும் ஒழுக்க நெறிகளைக் கொண்டு ஒழுகுதல்.

**'ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்**
**உயிரினும் ஓம்பப் படும்'8 (குறள்-131)**

4. பெரியோர்களின் சொற்படி கேட்டு வாழ்க்கை நடத்துதல்.

**"ஒருநாள் பழகினும் பெரியோர் கேண்மை**
**இருநிலம் பிளக்க வேர்வீழ்க்கும்மே"9(வெற்றி வேட்கை -34)**

**"பெரியாரைத் துணைக்கொள்"10(ஆத்திசூடி-82)**

**"மூத்தோர் சொன்ன வார்த்தைஅமிர்தம்"11 (கொன்றைவேந்தன்- 75)**

போன்றவை பண்டைக் கால மக்களின் வாழ்க்கை முறையிலும் வாழ்விலும் பண்பாடு பெறுகின்ற இடமாகும்.

இதனையே வள்ளுவப் பெருந்தகை

பண்புடைமை என்னும் அதிகாரத்தில் முழுமையாக எடுத்தாண்டுள்ளார்

**"பண்புடையார் பட்டுண்டு உலகம் அதுவின்றேல்**
**மன்புக்கு மாய்வது மன்"12 (குறள்- 996)**

**பொய்க்கூறாமை**

வள்ளுவப் பெருந்தகை தம்முடைய குறட்பாவில் பொய்க்கூறாமையே சிறந்த அறம் என்று கூறுகிறார் .இதனையே வரலாறும் இராஜ அரிச்சந்திரா வாழ்க்கை வரலாற்றின் மூலமாக நமக்குப் பறைசாற்றி நிற்கின்றது. மனிதன் தன்னுடைய அன்றாட வாழ்வில் பொய்கூறாமல் வாய்மையோடு வாழ்வை நடத்தினால் அதன்பொருட்டு ஏற்படும் நன்மைகள் ஏராளமாகும் என்பதனை வாய்மை அதிகாரத்தில் அழகாகக் கூறிச் சென்றுள்ளார்.

இதனையே வள்ளுவப் பெருந்தகை

**“வாய்மை எனப்படுவது யாதெனின் யாதொன்றும்**

**தீமை இலாத சொலல்”13 (குறள்- 291)**

மனிதன் வாழ்கின்ற வாழ்க்கையிலும் அன்றாடம் மேற்கொள்கின்ற வாழ்வியலிலும் பொய்க்கூறாமை என்னும் பண்பு தலைதூக்கி நிற்கிறது.அஃது தனக்கு மட்டும் அல்லாமல் தன்னைச் சார்ந்த சமூதாயத்திற்கும் பயனளிக்கும் என்பதை காலம் காலமாகத் தமிழ்கூறும் நல்லுலகத்தால் மெய்ப்பிக்கப்பட்டு வந்திருக்கிறது.

பொய்க்கூறாமையே ஒரு மனிதனை நீண்ட நாள் நீடித்த புகழுடன் வாழவைக்கும் என்பது அசைக்க முடியாத உண்மையாக இன்றளவும் நீடிக்கிறது.

**மது அருந்தாமை(கள்ளுண்ணாமை)**

சங்ககாலத்தில் மது அருந்துதல் ஏற்றுக்கொள்ளப்படாலும் பதினெண்கீழ்க்கணக்கு காலத்தில் அது முற்றிலும் மறுக்கப்பட்டது காரணம் அஃது மனித வாழ்க்கையையும் வாழ்வியலையும் பாதிக்கும் கூறாகவே சமுதாயத்தில் பார்க்கப்பட்டது

தற்காலத்தில் நடக்கின்ற சில சமுதாயத்தால் ஏற்றுக் கொள்ளப்படாத செயல்பாடுகள் மது அருந்துவதனாலேயே ஏற்படுகின்றன என்று சிந்தித்து என்னவோ நீதி நூல்காலங்களில் கூறப்பட்டு இருப்பதையும் இங்கு ஒப்பிட்டு சிந்திக்கத் தூண்டுகிறது.

**புறங்கூறாமை**

இதனையே வள்ளுவம்

**"புறஞ்சொல்லித் திரிவாரோடு இனங்க வேண்டாம்"14 (உலகநீதி,பாடல் 9)**

**"புறஞ் சொல்லல் ஆகாது பாப்பா"15 (பாரதி, ஓடிவிளையாடு பாப்பா)**

புறங்கூறாமை என்னும் அதிகாரத்தில் வலியுறுத்தி கூறுகிறார் காரணம் புறங்கூறாமை என்பது மனித வாழ்க்கையை மேம்படுத்தும் ஒரு வாழ்வியல் அரணாகும் என்று சான்றோர் பெருமக்கள் கூறிச்சென்றுள்ளனர்.புறஞ்சொல்லித் திரிபவரோடு இனங்கி வாழ்ந்தால் நம்வாழ்கையோடு நம்மைச்சுற்றி உள்ளவர்களின் வாழ்க்கையையும் கெட்டு சீரழியும் என்பதை பண்டையக் காலந்தொட்டு பாரதிகாலம் வரை தமிழ்கூறும் நல்லுலகம் பறைசாற்றி நிற்பது இங்கு ஒப்பு நோக்கத்தக்கது ஆகவே, மனித வாழ்க்கை சீர் பெறுவதற்கும் செம்மை அடைவதற்கும் வாழ்வியல் மேம்படுவதற்கும் புறங்கூறாமையே சிறந்த வழியாக என்று தமிழிலக்கியம் கூறிச்சென்றுள்ளது.

**இன்னா செய்யாது இருக்கவேண்டும்(இனியது செய்யவேண்டும்)**

**“உயிர்களிடத்தில் அன்பு வேண்டும்”16** என்றார் பாரதி. மேலும், மகாகவி பாரதியார் ஓர் அறிவு முதல் ஆறு அறிவு வரை அனைத்து உயிர்களுக்கும் இன்னா செய்யாமையைப் பற்றி பண்டைய இலக்கியங்கள் முதல் தற்கால இலக்கியங்கள் வரை பறைசாற்றி நிற்கின்றன.

திருக்குறள் அல்லது ( தீமை) என்பது குறைந்தாலே நல்லது என்பது தானாக வளரும் என்பதை காலந்தோறும் தோன்றிய இலக்கியங்கள் காலக் கண்ணாடியாக படம் பிடித்துக் காட்டுகின்றன.

**சான்றாக**

**"விளைக வயலே வருக இரவளர்"17(ஐங்குறுநூறு, பாடல் 2)**

**“அல்லது கெடுக அறம்பல செழிக்க”18 ((ஐங்குறுநூறு, பாடல் 7)**

**இனியவைக்கூறல்**

**“இனிய உளவாக இன்னாத கூறல் கனியிருப்பக்**

*தமிழ்த்துறை - சங்கரா அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரி (தன்னாட்சி)

**காய் கவர்ந்தற்று"19 (குறள்- 100)**

**இனியவை நாற்பது**

**"நன்றிப் பநன்தூக்கி வாழ்தல் நனிஇனிது**

**மன்றக்கொடும்பாடு உரையாத மாண்பினிதே**

**அன்ற்றிவார் யாரும் றடைக்கலம் வெளவாத**

**நன்றியின் நன்கினியது இல்"20**

**( பாடல் எண்- 30 இனியவை நாற்பது)**

ஒருவன் செய்த நல்லவற்றின் பயன்களைக் கருதி வாழ்வது இனிதாகும்.அறம்கூறும் சபையில் ஒருபுறம் சாராமல் கூறாத மாட்சிமை இனியவையாகும். தன்னிடம் வைத்த அடைக்கலமாய் வைத்துச் சென்ற பொருள்களை கவர்ந்து கொள்ளாத நன்மையைவிட மிக இனியது வேறெதுவுமில்லை என்று இனியவைப் பற்றி இனியவை நாற்பதுகூறுவதை நாம் சிந்திக்கத் தூண்டுகிறது.

**"எண்ணிய முடிதல் வேண்டும் நல்லவே எண்ணல் வேண்டும்"21**

**"மனதில் உறுதி வேண்டும் வாக்கினிலே இனிமை வேண்டும்"22**

மேலே கூறிய கருத்துகள் மனித வாழ்க்கையையும் வாழ்வியலையும் செம்படுத்த பண்டைய உலக கியங்களால் எடுத்தாளப்பட்டன.

**ஊன் உண்ணாமையைக் கடைபிடித்தல்**

**"ஊனைத்தின்று ஊனைப் பெருக்குதல் முன்இன்னா"23**

**(இன்னா நாற்பது, பாடல் 22)**

என்று இன்னா நாற்பது கூறுகின்றது

இதனையே

பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் தலையாய நூலான திருக்குறளும் ஓர் அதிகாரத்தில் கூறுகிறது.

**"கொல்லாமை மேற்கொண்டு ஒழுகுவான் வாழ்நாள்மேல்**

**செல்லாது உயிர் உண்ணும் கூற்று"23(குறள்-326)**

எவன் ஒருவன் கொல்லா விரத்த்தை நாள்தோறும் கடைபிடித்து வாழ்க்கையை நடத்துகின்றவனுடைய உயிரைக் குடிக்கின்ற எமன் வரமாட்டான் என்று வள்ளுவம் கூறுகின்றது.

**கல்லாமையை இல்லாமல் செய்வோம்**

மேலே கூறிய அனைத்து கருத்துகளுக்கும் அடிப்படையாக அமைவது கல்வி அதனை ஏட்டுக்கல்வி என்றும் அனுபவக் கல்வி என்றும் இருவகையாகப் பிரிப்பர் மனித வாழ்க்கைக்கும் வாழ்வியலுக்கும் அடிப்படையானவை உணவு, உடை, உறையுள் என்று சொன்ன போதிலும் இவற்றிற்கு பெரும் ஆதாரமாக விளங்குவது கல்வி எனும் அழியாச் செல்வமாகும்.அந்தக் கல்வியைப் பண்டையக் காலந்தொட்டு தற்காலம் வரை தமிழர்கள் தங்களுடைய வாழ்க்கை முறையை மேம்படுத்துவதற்கும் வாழ்வியலை சிறந்த முறையில் நடத்துவதற்கும் இதுகாரும் பேணிப் பாதுகாத்து வந்துள்ளனர்.

**இதனையே வள்ளுவப் பெருந்தகை**

**"விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்**

**கற்றாரோடு ஏனை யவர் "24(குறள்-410)**

அறிவை வளர்க்கும் நூல்களைக் கற்றவர்களோடு கல்லாதவர்களைஒப்பிடுவது மனிதர்களோடு விலங்குகளை ஒப்பிடுவதற்குச் சம்மாகும்.

**“கற்கை நன்றே கற்கை நன்றே**

**பிச்சை புகினும் கற்கை நன்றே”25 (வெற்றி வேட்கை-35)**

**“எக்குடிப் பிறப்பினும் யாவரே ஆயினும்**

**அக்குடியில் கற்றோரை மேல்வரு கென்பர்”26(வெற்றி வேட்கை-38)**

ஆகவே, கல்வியைப் பிச்சை எடுத்தாவது படிக்கவேண்டும் அதிவீர்ராம பாண்டியரும் எக்குடியில் பிறந்தால் என்ன? கல்வி கற்றவரையே மேலோர் என்பர் என்றும் அவரே கூறுகிறார்.

**இதனையே வள்ளுவப் பெருந்தகை**

**“ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு**

**எழுமையும் ஏமாப்பு உடைத்து”27(குறள்-398)**

தான் ஒரு பிறவியில் கற்ற கல்வி தான் பிறக்கும் ஏழேழு பிறவிக்கும் உதவி புரியும் என்கிறார்.

கல்வியறிவு இல்லாதவர் ஆணோ? பெண்ணோ? சங்ககாலந்தொட்டு இக்காலம் வரை படிக்ககாதவர்களை விலங்குகளுக்குச் சம்மாகவே கருதிவந்தனர்.பண்டைய தமிழர்கள் இதன்பொருட்டுகல்வியையும் அதன் மூலமாகக் கிடைக்கும் பயன்களையும் தெள்ளத்தெளிவாக அறிந்து இருந்தனர் பண்டையக் காலத்தில் வாழ்ந்த மக்கள் இதன்பொருட்டு அவர்களுடைய வாழ்க்கையும் அதன்மூலமாக வாழ்வியலையும் நம்மால் அறிந்துகொள்ள முடிகிறது.

**அடிக்குறிப்புகள்:**

[1.] சங்க இலக்கியம் - புறநானூறு (தொகுதி 10), புலவர் இரா. இளங்குமரன் (உ.ஆ.), வர்த்தமானன் முதற்பதிப்பு, ஜனவரி 2022, வர்த்தமானன் பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு, ஜனவரி 2022.

[2.] 2.ஔவையார,106-ஆத்திசூடி, தமிழ்நீதிச்செல்வம்,சாந்தா பப்ளிஷர்ஸ்,முதற்பதிப்பு பிபரவரி1995.ப.36.

[3.] 3.ஔவையார,20-ஆத்திசூடி, தமிழ் நீதிச்செல்வம்,சாந்தா பப்ளிஷர்ஸ்,முதற்பதிப்பு பிபரவரி1995.ப.24

[4.] 4.ஔவையார,1-கொன்றைவேந்தன், தமிழ்நீதிச்செல்வம், சாந்தா பப்ளிஷர்ஸ்,முதற்பதிப்பு பிப்ரவரி1995.ப.37

[5.] 5.சிலப்பதிகாரம் மூலமும் உரையும், வ.த. இராமசுப்பிரமணியம், பூம்புகார் பதிப்பகம், 127 (ப.எண் 63), பிரகாசம் சாலை (பிராட்வே), சென்னை, மூன்றாம் பதிப்பு அக்டோபர், 2021.

[6.] 6.பாரதியார், 6 - பாப்பா பாட்டு -பாரதியார் கவிதைகள், தென்றல் நிலையம், முதற்பதிப்பு, மார்ச் 2001 ப. 241.

[7.] 7.புலவர் சி வசந்தா, காப்பியங்களும் பழக்கவழக்கங்களும் நம்பிக்கைகளும்,முதற்பதிப்பு ,ராஜம் ஆப்செட் சென்னை,டிசம்பர்-2001, ப.131.

[8.] 8.திருவள்ளுவர்,131-ஒழுக்கமுடைமை,பதிணென்கீழ்க்கணக்குநூல்கள் தொ-1, வர்த்தமானன் பதிப்பகம், புதிய பதிப்பு நவம்பர் 2022.ப.52

[9.] 9.ஆதிவீரராம பாண்டியர்,34-வெற்றி வேற்கை, நறுந்தொகை,தமிழ் நீதிச் செல்வம், சாந்தா பப்ளிஷர்ஸ்,முதற்பதிப்பு பிப்ரவரி1995.ப.63.

[10.] 10.ஔவையார,32-ஆத்திசூடி, தமிழ் நீதிச்செல்வம்,சாந்தா பப்ளிஷர்ஸ்,முதற்பதிப்பு பிப்ரவரி1995.ப.32

[11.] 11.ஔவையார,75-கொன்றைவேந்தன், தமிழ்நீதிச்செல்வம், சாந்தா பப்ளிஷர்ஸ்,முதற்பதிப்பு பிப்ரவரி1995.ப.50

[12.] 12. திருவள்ளுவர்,100-பண்புடைமை,பதிணென்கீழ்க்கணக்குநூல்கள் தொ-1, வர்த்தமானன் பதிப்பகம்,பு தியபதிப்பு, நவம்பர் 2022.ப.52.

[13.] 13.திருவள்ளுவர்,30-வாய்மை, பதிணென்கீழ்க்கணக்குநூல்கள் தொ-1, வர்த்தமானன் பதிப்பகம்,புதியபதிப்பு, நவம்பர் 2022.ப.84.

[14.] 14.உலகநாதனார்,9-உலகநீதி, தமிழ் நீதிச்செல்வம்,சாந்தா பப்ளிஷர்ஸ்,முதற்பதிப்பு பிப்ரவரி1995.ப.83.

[15.] 15.பாரதியார், 7 - பாப்பா பாட்டு -பாரதியார் கவிதைகள், தென்றல் நிலையம், முதற்பதிப்பு, மார்ச் 2001 ப.241.

[16.] 16. பாரதியார், 16 - பாப்பா பாட்டு -பாரதியார் கவிதைகள், தென்றல் நிலையம், முதற்பதிப்பு, மார்ச் 2001 ப. 242.

[17.] 17. சங்க இலக்கியம் - ஐங்குறுநூறு (தொகுதி 3), முனைவர் அர. சிங்கார வடிவேலன் (உ.ஆ.), வர்த்தமானன், வர்த்தமானன் பதிப்பகம் சென்னை, முதற்பதிப்பு, ஜனவரி 2022.

[18.] 18. சங்க இலக்கியம் - ஐங்குறுநூறு (தொகுதி 3), முனைவர் அர. சிங்கார வடிவேலன் (உ.ஆ.), வர்த்தமானன், வர்த்தமானன் பதிப்பகம் சென்னை, முதற்பதிப்பு, ஜனவரி 2022.

[19.] 19.திருவள்ளுவர்,10-இனிவை கூறல்,பதிணென்கீழ்க்கணக்குநூல்கள் தொ-1, வர்த்தமானன் பதப்பகம்,புதிய பதிப்பு, நவம்பர் 2022.ப.45.

[20.] 20.பூதஞ்சேந்தனார்,30,இனியவைநாற்பது,பதிணென்கீழ்க்கணக்குநூல்கள் தொ-2, வர்த்தமானன் பதப்பகம்,புதிய பதிப்பு, நவம்பர் 2022.ப.68.

[21.] 21.பாரதியார், 66 - மஹாசக்திக்கு விண்ணப்பம்-பாரதியார் கவிதைகள், தென்றல் நிலையம், முதற்பதிப்பு, மார்ச் 2001 ப. 98.

[22.] 22.கபிலர்,22-இன்னாநாற்பது,பதிணென்கீழ்க்கணக்குநூல்கள் தொ-2, வர்த்தமானன் பதிப்பகம்,புதிய பதிப்பு, நவம்பர் 2022.ப.49.

[23.] 23.திருவள்ளுவர்,326-கொல்லாமை,பதிணென்கீழ்க்கணக்குநூல்கள் தொ-1, வர்த்தமானன் பதிப்பகம்,புதிய பதிப்பு நவம்பர் 2022.ப.90.

[24.] 24.திருவள்ளுவர்,41-கல்லாமை,பதிணென்கீழ்க்கணக்குநூல்கள் தொ-1, வர்த்தமானன் பதிப்பகம்,புதிய பதிப்பு நவம்பர் 2022.ப.108.

[25.] 25.ஆதிவீரராம பாண்டியர்,35-வெற்றி வேற்கை, நறுந்தொகை,தமிழ் நீதிச் செல்வம், சாந்தா பப்ளிஷர்ஸ்,முதற்பதிப்பு பிப்ரவரி1995.ப.63.

[26.] 26.ஆதிவீரராம பாண்டியர்,38-வெற்றி வேற்கை, நறுந்தொகை, தமிழ் நீதிச் செல்வம், சாந்தா பப்ளிஷர்ஸ்,முதற்பதிப்பு பிப்ரவரி1995.ப.64.

[27.] 27.திருவள்ளுவர்,40-கல்வி, பதிணென்கீழ்க்கணக்குநூல்கள் தொ-1, வர்த்தமானன் பதிப்பகம்,புதியபதிப்பு நவம்பர் 2022.ப.107.

**துணைநூற்பட்டியல்**

[1.] **உரையாசிரியர்கள் (தொகுப்பு).** *தமிழ் நீதிச் செல்வம்*. சாந்தா பப்ளிஷர்ஸ், 1995.

[2.] **கபிலர்.** *பதிணென்கீழ்க்கணக்கு நூல்கள் (தொகுதி-2)*. வர்த்தமானன் பதிப்பகம், 2022.

[3.] **பாரதியார்.** *பாரதியார் கவிதைகள்*. தென்றல் நிலையம், 2001.

[4.] **பூதஞ்சேந்தனார்.** *பதிணென்கீழ்க்கணக்கு நூல்கள் (தொகுதி-2)*. வர்த்தமானன் பதிப்பகம், 2022.

[5.] **புலவர் சி. வசந்தா.** *காப்பியங்களும் பழக்கவழக்கங்களும் நம்பிக்கைகளும்*. ராஜம் ஆப்செட், 2001.

[6.] **மாணிக்கம், அ.** *திருக்குறள் தெளிவுரை*. மணிவாசகர் பதிப்பகம், 1997.

[7.] **திருவள்ளுவர்.** *பதிணென்கீழ்க்கணக்கு நூல்கள் (தொகுதி-1)*. வர்த்தமானன் பதிப்பகம், 2022.